**தேசிய தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகம் - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பொன்று உள்ளடங்கலாக, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தேசிய நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தேசிய நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது தேசிய நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

தேசிய நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தேசிய நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின்

பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி தேசிய நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக தேசிய நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தேசிய நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது தேசிய நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது தேசிய நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க தேசிய நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தேசிய நிறுவகம் தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- தேசிய நிறுவகத்தின் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | தொடர்புடைய நியமத்துடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - இலக்கம் 02 | | |
| | இந்த நியமத்தின் 40ஆம் பந்தியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கையில், வட்டியின் பெறுகைகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் தனியாக வெளிப்படுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், நிறுவனத்தினால் வருமானக் கூற்றில் குறிப்பிடப்பட்ட மீளாய்வாண்டின் வட்டி வருமானம் ரூபா 10,404,473 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் மிகைகளுடன் வருமானம் சரிப்படுத்தப்பட்டிருக்காததுடன் காசாகப் பெறப்பட்ட தொகை முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டவாறு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம எண்களுடன் இணங்கியவாறு தொடர்ந்துவரும் ஆண்டில் காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு இணங்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பில் நிறுவனத்தின் கணக்காய்விற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் மற்றும் அவற்றில் விசேடமாக வரையறுத்துக் குறிப்பிடப்பட்ட வழிகாட்டல்களின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரிப்பதற்கு நிறுவனம் ஏற்பாடுகளினை மேற்கொள்ளல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 138,543 தொகையொன்றின் மூலம் ஆண்டின் வட்டி வருமானம் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிந்ததுடன் நிலையான வைப்புக்கள் மற்றும் கடன்பட்டோர் மீதிகள் மற்றும் தொடர்புடைய துணை ஆவணங்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட பெறுமதிகளுக்கிடையே ரூபா 731,415 வித்தியாசமொன்று அவதானிக்க முடிந்தது. | 2018 ஆம் ஆண்டில் வட்டி வருமானம் ரூபா 138,543 தொகையொன்றால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்த கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றதுடன் 2019 ஆம் அண்டில் முன்னைய ஆண்டு சரிப்படுத்தலொன்றாக 2018 ஆம் ஆண்டின் கணக்குகளிலிருந்து அதனை திருத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | நிறுவனம் ஆண்டின் வட்டி வருமானத்தை துல்லியமாக கணிப்பிடப்பட்டு கணிக்கிட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2009 இன் 38 ஆம் இலக்க தேசிய தொழிற்பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவன சட்டத்தின் 3(1)(கா) பிரிவு | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை தொடர்பான தேசிய நியமங்கள் தாபிக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தின் தாபிப்பின் பின்னர் 09 வருடங்கள் | நியமங்களினை ஸ்தாபிப்பதற்காக 2018 பெப்ரவரியிலிருந்து நிறுவனம் செயற்படுத்தப்பட்டதுடன் பின்னர், மதிப்பிற்குரிய ஊழியர் மற்றும் | இலங்கையில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சகாதார துறையுடன் தொடர்புடைய தேசிய நியமங்கள் காணப்படாமை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காலப்பகுதியொன்று கடந்திருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரையிலும் இந்த செயற்பாடு வெற்றிகரமாக பூர்த்தியாக்கப்பட்டிருக்க வில்லை. | தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் செயலாளரின் தலைமைத்துவத்துடன் நடாத்தப்பட்ட கூட்டத்தில் இந்த நியமங்களினை ஸ்தாபிப்பதற்காக பரிந்துரைக்கப்பட்ட குழுவொன்றை ஸ்தாபிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டது. எவ்வாறாயினும், இந்த தொழிற்பாட்டின் பூர்த்தியாக்கலுக்காக குழுக் கூட்டமொன்று இதுவரை கூட்டப்பட்டிருக் காததுடன் இந்த நியமங்களை ஸ்தாபிக்கின்ற அவ்வாறான சந்தர்ப்பமொன்றில் நிறுவகரீதியான அனைத்து தொழில்நுட்ப விடயங்களையும் வழங்குவதற்கு நிறுவனத்தின் விருப்பத்தினை நிறுவகம் அறிவித்திருந்தது. | பிரச்சினையொன்றாக மாறியதுடன் ஆகையினால், விரைவான மற்றும் உறுதியான நிகழ்ச்சித் திட்டமொன்றின் கீழ் இலங்கையில் தேசிய நியமங்கள் ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2018 சனவரி 24 இன் 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 2 மற்றும் 3 ஆம் பந்திகள் | மனித வளங்கள் அபிவிருத்தி தொடர்பான திட்டமொன்று தயாரிக்கப் பட்டிருக்காததுடன் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய உத்தியோகத்தர்களின் தகுதி ஆற்றல் தேவைப்பாடுகள் அந்த சுற்றறிக்கையின் 3 ஆம் | மனித வளங்களின் அபிவிருத்திக்காக திட்டமொன்று காணப்படுகின்றதுடன் பயிற்சி சந்தர்ப்பம் 2018 ஆம் ஆண்டின் போது அலுவலகர்களுக்காக ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கின்றது | பொது நிர்வாக சுற்றறிக்கைகளின் பிரகாரம் மனித வளங்களை முகாமை செய்வதற்கான பொறுப்பை நிறுவனம் எடுக்க வேண்டும். |

பந்தியின் பிரகாரம் இனங்காணப்பட்டிருக்க வில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 21,506,251 மிகை தொகையொன்றாகக் காணப்பட்டதுடன் தொடர்புடைய முன்னைய ஆண்டில் மிகைகள் ரூபா 18,534,446 தொகையாகக் காணப்பட்டது. ஆகையினால், நிதிசார் விளைவில் ரூபா 2,971,805 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டு வருமானம் ரூபா 2,840,448 இனால் அதிகரித்தமை மற்றும் திறைசேரி மானியங்கள் ரூபா 1,957,772 இனால் அதிகரித்தமை என்பன முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாகக் காணப்பட்டன.

## 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிர்மாணத்துறையில் தொழில்சார் பாதுகாப்பு தொடர்பான 02 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துவதனூடாக ரூபா 315,000 வருமானமொன்றை உழைப்பதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும், உண்மையாக 01 நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்தியதிலிருந்து ரூபா 84,000 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும், நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள்களுக்கு இணங்க ஒரு நிகழ்ச்சித்திட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் பூர்த்திக்காக பொருளாதார ரீதியில் இலாபகரமான மற்றும் வினைத்திறனான முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டு பேணப்படல் வேண்டும். |

## 3.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ‘‘ஐக்கிய நாடுகளின் அனைத்து உறுப்பு நாடுகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, நிலைபேறான அபிவிருத்திக்கான நிகழ்ச்சி நிரல் 2030’’ இன் பிரகாரம் ஒவ்வொரு பொது நிறுவனங்களும் தொழிற்பட வேண்டியதுடன், நிறுவனத்தின் வரம்பின் கீழ் காணப்படும் செயற்பாடுகளினை செயற்படுத்த வேண்டிய வழிவகை பற்றி தேசிய தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவனம் அறிந்திருக்கவில்லை. ஆகையினால், அதன் தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காண்பதற்கு, இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை நோக்கி நெருங்க வேண்டிய திருப்பு முனைகளும் அந்த இலக்குகள் மீது நெருங்குவதை அளவை செய்வதற்கான சுட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பில் தொழிற்படும் பொருட்டு தேசிய தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவனத்தினால் குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | ‘‘ஐக்கிய நாடுகளின் அனைத்து உறுப்பு நாடுகளினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலைபேறான அபிவிருத்திக்கான நிகழ்ச்சி நிரல் 2030’’ இன் பிரகாரம் நிறுவனம் செயற்படல் வேண்டும். |